# York பகுதியின் டவுன் சின்ரொம் கூட்டமைப்பு

"பெற்றோர்கள் Down Syndrome எனும் குறைபாட்டால் பதிக்கப்பட்டவர்கள் மற்றும் சமூக நலத்தில் அக்கரை கொண்டவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து டவுன் சின்ரோம் எனும் பாதிப்பை பற்றியும், இக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்களுடைய வாழ்க்கை நலன் சமூகத்தில் அங்கீகாரம் மற்றும் சக மரியாதை கிடைப்பதற்கான விழிப்புணர்வை ஏர்படுத்துவதற்கான கூட்டமைப்பு."

எங்களுடைய முக்கிய குறிக்கோள் டவுன் சின்ரொம் உள்ளவர்களுக்கு துணையாக இருந்து அவர்கள் நன்றாக வாழ்வதற்கு உதவி செய்வதுதான்.

நாங்கள் இவ் உதவிகளை எவ்வாறு செய்கிறோம் என்றால்:

1. செய்திகளை பரிமாறுதல்:
எங்களுடைய இணையதளம், நூலகம், தொலைப்பேசி, நாள்ளிதழ் மூலமாகவும் மற்றும் நாங்கள் அவ்வப்பொழுது கூடி சிறப்பு விருந்தினர்களை அழைத்து இதைப் பற்றி சிறப்புரையாற்றி எங்களுடைய செய்திகளை பரிமாரிக் கொள்ள முயல்கின்றோம்.

2. வரவெற்றல்:
டவுன் சின்ரொம்முடன் பிறந்த குழந்தைகளை வரவேற்று அவர்களுடைய வீட்டிற்கு எங்கள் சேவையாளர்கள் சென்று அவர்களுடன் பேசி இக்குழந்தைகளை வரவேர்கின்றனர்.

3. சேர்ந்து பணியாற்றுதல்:
SEACயை சேர்ந்தவர்களுடன் சேர்ந்து பணிபுரிதல் SEACயை சேர்ந்தவர்கள் டவுன் சின்ரொம் உள்ள குழந்தைகளின் பொது வாழ்க்கை நலனுக்காக பாடுபடுகின்றனர்.

4. சிறப்புப் பய்ற்சி:
அதாவது பாட்டு மூலமாக ( Music Therapy) பெச்சுவழி- பெச்சு, மொழி, வெலைப்பாடு மூலமாக (Chatter boxes- Speech, Language and Occupational theraphy) மற்றும் அவர்களுக்கு bowling பந்து விளையாட்டுப் போட்டி சிறுவர்களுக்கு, வாலிபர்களுக்கு என்று தனித்தனியாக நடத்துகிறோம்.

5. பொது நிகழ்ச்சிகள்:
வருடம் முழுதுமாக நிறைய நிகழ்ச்சிகளை நடத்தி அதன் மூலமாக நாம் ஒருவரை ஒருவர் பார்த்து புரிந்து கொள்ள முடிகிறது.

நாங்கள் உதவி செய்யக் காத்துக்கொண்டு இருக்கிறோம். நீங்கள் எப்பொழுது வெண்டுமானாலும் எங்களை தொடர்புக் கொள்ளளாம்.

தொலைப்பேசி எண்: 416-410-3696 (அ) 1-800-649-3696

இணையதளம்: www.dsayr.on.ca

E-Mail: dsayr@hotmail.com

விலாசம்: 1100 Gorham Street
Suite 11B-345
Newmarket, ON

டவுன் சின்ரொம்மிற்கான அடிப்படைக் காரண்ங்கள்

டவுன் சின்ரொம் உள்ளவர்களுக்கு பொதுவாக 46 மரபனுக்கள் (chromosome), மற்றும் 1 அதிகமான 21வது மரபனு உள்ளது. இந்த ஒரு அதிகப்படியான மரபனு முட்டையிலிருந்தோ அல்லது விந்திலிருந்தோ வந்திருக்கலாம். ஆனால் இந்த பாதிப்பின் காரணம் இன்னும் தெளிவாக கண்டறியப்படவில்லை.

900ல் ஒரு குழந்தை டவுன் சின்ரொம் உள்ளவர்களாகப் பிறக்கின்றனர்.

80% டவுன் சின்ரொம் உள்ளக் குழந்தைகள் 35 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கு தான்ப் பிறக்கின்றனர்.

டவுன் சின்ரொம் என்பது ஒரு காய்ச்சலோ, நோயோ அல்ல. அவர்கள் அதனால் அவதிப் படுவது இல்லை.

டவுன் சின்ரொம் உள்ளவர்களின் செயல்திரன், உடல் வளர்ச்சி, நடவடிக்கைகள் சாதாரண மனிதர்களைப் போலவே பெரும்பாலும் உள்ளது.

இவர்களுடைய வாழ்நாளும் எல்லோரையும் போலத்தான்.

டவுன் சின்ரொம் எல்லாப் பிரிவினரையும் தாக்கக் கூடும். இதற்கு ஆண் பெண் வித்தியாச இல்லை.

டவுன் சின்ரொம் உள்ளவர்கள் பெரும்பாலும் அவர்களது குடும்பத்தை சேர்ந்தவர்கள் மாதிரியே இருப்பார்கள்.

டவுன் சின்ரொம் உள்ளோர்களில் பெரும்பாலானோர் குறைந்த அளவே சிந்திக்கும் திறனை இழக்கின்றனர்.

பெரும்பாலாக எல்லோரும் டவுன் சின்ரொம் உள்ளவர்கள் மகிழ்ச்சியாக (அ) பிடிவாதமாக இருப்பார்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வோர் விதமாகத் தான் இருப்பார்கள்.

-